(4) அறிக்கை அளித்தல்.

(அ) துணை வினாவுக்கு அளித்த விடையைத் திருத்தும் அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் 8—11—1979 அன்று சட்டப் பேரவையில் வினா எண் 153ஐ ஒட்டிய துணை வினாக்களுக்குப் பதிலளிக்கையில் சிறுவாணி அணை 860 அடி உயரத்தில் கட்டப்பட்டு விட்டது என்றும் இன்னும் கட்ட வேண்டியது 30 அடி என்றும் தெரிவித்தேன். அது 860 மீட்டர் என்று இப்போது அறிகிறேன். அதோடுகூட கட்ட வேண்டிய மிச்சம் 18.5 மீட்டர். எனவே, எனது பதிலை 860 அடி என்பதை 860 மீட்டர் என்றும், கட்ட வேண்டியது 18.5 மீட்டர் என்றும் திருத்திக்கொள்ள விழைகிறேன்.

(ஆ) உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் உறுதி மொழிக் குழுவின் நான்காவது (ஆறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைமுன் வைக்கிறேன்.

1. தகவல் கோரல் (தொடர்ச்சி)

(ஆ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஓர் ஏடு குறித்து.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, இன்றைக்கு மேஜை மீது எக்ஸ்ட்ரா டினரி கெசட் ஒன்றை வைத்திருக்கிறார்கள். தொழில் தகராறு சட்டத்தை வாபஸ் வாங்குவதாக முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். இதற்கிடையில் மசோதா ஒன்று கொண்டு வரப்பட்டு அந்த மசோதாவுக்கு ஆட்சேபணை செய்தோம். நேற்று முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும்போது தொழில் தகராறு சட்டத்தைத் இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதை நாங்கள் வரவேற்றாலும் இதிலே கடைப்பிடிக்கப்பட்ட முறை சரியா என்பதை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே அதைப் பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொல்லி விட்டார்கள். மறுபடியும் இதைத் திரும்பக் கொண்டு வரக்கூடிய நிலைமைகள்கூட ஏற்படக் கூடாது என்று சொன்னார்கள்.